District Munsif Cum Judicial Magistrate Court, Radhapuram. 14.07.2026

**Judicial Form No-53**

**DEPOSITION OF WITNESS IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RADHAPURAM.**

**Case No. CC - 353/2022**

**Prosecution Witness –PW - 2**

| | | | |
|---|---|---|---|
| Name: | சுயம்புலிங்கம் | Nationality: | இந்தியன் |
| Father's Name : | தங்கசாமி | Calling: | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Village: | சிவசுப்பிரமணியபுரம் | Religion: | இந்து |
| Taluk: | அகஸ்தீஸ்வரம் | Age: | 60 |

**( Accused A1, A3 to A5 Present . A2 absent. 317 Crpc Petition filed and allowed)**

**Solemnly affirmed in accordance with the provisions of Sec 3 and 4 of the Indian Oaths Act 1969 r/w 35,36 of Criminal rules of practice 2020.14.07.2026**

**<u>சாட்சி நீதிமன்ற ஊழியரால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது</u>**

2026ம் ஆண்டு ஜீலை திங்கள் 14 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**<u>முதல் விசாரணை:</u>**

1) நான் தற்போது கூடன்குளம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். காவல் நிலைய குற்ற எண்.32/2021 வழக்கின் உள்ள முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக் காவலர் திரவியகுமார் மற்றும் புலன்விசாரணை செய்த உதவி ஆய்வாளர் செல்வராஜ் ஆகியோர்கள் வேறு காவல்நிலையத்தில் பணி புரிவதால் அவர்களுக்கு அழைப்பாணை அனுப்புவதில் தாமதம் ஏற்படுவதாலும், அவர்கள் சார்பாக ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த 18.01.2021ம் தேதி 13.30 மணிக்கு கூடன்குளம் தலைமைக் காவலர் திரவியகுமார் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த

போது கூடன்குளம் அரசு மருத்துவமனையிலிருந்து போன் மூலம் கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கூடன்குளம் மாதா கோவில் தெருவைச் சேர்ந்த ஜாய்சன் மனைவி சகாய அனுஷா என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றுள்ளார். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 32/2021 இதச சட்டப்பிரிவுகள் 147, 448, 294(b), 323, 506(1) of IPC and 4 of TNPHW Act சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசலையும் புகார் மனுவையும் இணைத்து கனம் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பியும், இதர நகலை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணைக்காக உயர் அதிகாரியின் பார்வைக்கும் வைத்துள்ளார்.

3) விசாரணை அதிகாரி வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்டு 18.01.2021ம் தேதி 14.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜார்ஜ், தங்ககனி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **பார்வைமகஜர் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4,5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**4)** பின்னர் எதிரிகளை தொடர்ந்து தேடி வந்த நிலையில் எதிரிகள் அனைவரும் 27.01.2021 ஆம் தேதி 18.00 மணிக்கு கூடன்குளத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்து மாண்புமிகு உச்சநீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றி நிலைய பதிவேடுகளில் பதிவு செய்து தக்க இரு நபர் ஜாமீனில் காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார்.

5) பின்னர் சாட்சிகள் 1 முதல் 8 மற்றும் வழக்கு பதிவு செய்த பதிவு செய்த தலைமைக் காவலர் திரவியகுமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

(6) பின்னர் காயம்பட்ட சாட்சி சகாயஅனுஷா என்பவருக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் திருமதி.கலைவாணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மருத்துவர் சாதாரண காயம் என காயச்சான்று வழங்கியுள்ளார். **காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(7) வழக்கின் விசாரணை அதிகாரி வழக்கின் எதிரி மீதான குற்றம் உண்மை என தெரிய வந்ததால்147, 448, 294(b), 323, 506(1) of IPC and 4 of TNPHW Act ஆக குற்ற இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** –

1) நீங்கள் சொன்ன தேதியிலும், சொன்ன நேரத்திலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வில்லை என்றாலும், வழக்கிற்கு தேவையான ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும், சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகளை நேரில் விசாரிக்கவில்லை என்றாலும், இந்த விசாரணை ஒருதலைபட்சமானது. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

V C KUBERRASUNDAR

Digitally signed by V C KUBERRASUNDAR
Date: 2026.07.14 18:02:25 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Radhapuram.